**அகலவத்த பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அகலவத்த பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் அகலவத்த பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 3.29 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது மீளாய்வாண்டில் உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட கடன் பணத்தின் தவணைப் பணமான ரூபா 661,125 காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளாக கொண்டுவரப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டில் பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியம் மற்றும் பாலிந்தநுவர பிரதேச சபைக்கு நீண்ட காலமாக செலுத்த வேண்டிய ரூபா 5,534,994 கடன் தொகையில் 2020 ஆம் ஆண்டிற்குரிய செலுத்த வேண்டிய ரூபா 1,407,339 கடன் தவணைப் பணம் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 15.8 இன் பிரகாரம் நடைமுறைப் பொறுப்புக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அதன்படி காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2021 ஆம் ஆண்டு முதல் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். | - மேற்படி - |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெளிவாரி நிதிஏற்பாட்டின் மூலம் கிடைக்க வேண்டிய ரூபா 2,575,532 தொகை மூலதன மானியமாக விரிவான வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 இன் இறுதிக் கணக்குகளில் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | பாடசாலை கட்டிடத்தின் கதவினை தயாரிப்பதற்காக செலுத்த வேண்டிய ரூபா 7,840 தொகை கட்டிட கணக்கிற்கும் சபை வேலை கடன்கொடுத்தோராகவும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டில் பெற வேண்டிய ரூபா 315,000 உறுப்பினர் படி கிடைக்க வேண்டியதாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டு முதல் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படும். | - மேற்படி - |
| (ஈ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,772,632 தொகைக்கு பதிலாக ரூபா 1,683,544 கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 இன் இறுதிக் கணக்குகளில் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (உ) | நேர் ஊழிய முறைமையின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீதி வடிகாண் முறைமையின் 04 செயற்திட்டங்களின் பெறுமதியான ரூபா 972,385 தொகை ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2058 ஆம் இலக்க கழிவுப்பொருள் ட்ரெயிலரின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 270,000 ஆக இருந்த போதிலும் அது நிதிக்கூற்றுக்களில் ரூபா 815,000 ஆக ரூபா 545,000 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | மீளாய்வாண்டின் கட்டிட மதிப்பீட்டுப் பெறுமதிக்கு பதிலாக ரூபா 100,810,868 தொகையான புத்தக இருப்பு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மதிப்பீட்டு அறிக்கையை பெற்று எதிர்காலத்தில் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஏ) | 05 சேலைவை உடன்படிக்கையின் ஆண்டின் செலவினம் ரூபா 14,880 இற்கு பதிலாக அது ரூபா 71,161 ஆக ரூபா 56,281 தொகையினால் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 இன் இறுதிக் கணக்குகளில் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஐ) | உள்ளூராட்சித் திணைக்களத்தால் ரூபா 2,388,700 பெறுமதியுடைய டிரக்டர், ட்ரெயிலர் மற்றும் முச்சக்கர வண்டி என்பன கடன் அடிப்படையில் சபைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக இதுவரை செலுத்தப்பட்ட பணம் ரூபா 1,095,000 ஆகும். மேலும் செலுத்த வேண்டிய ரூபா 1,293,700 தொகைக்கு பதிலாக ரூபா 1,266,325 ஆக ரூபா 27,375 தொகை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஒ) | 2020 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 3,180,000 பெறுமதியான வீதி செப்பனிடும் இயந்திரம் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டமையால் அந்த அளவினால் இயந்திரக் கணக்கு குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

**2. நிதி மீளாய்வு**

----------------------

**2.1 நிதி விளைவுகள்**

-----------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 11,887,800 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,173,629 ஆகும்.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும், ஏனைய அதிகாரத்தரப்பினரிடமிருந்தும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,850,000 ஆகும். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |